# ஜீவாத்துமா
# A LIVING SOUL

**அறிமுகம்**

*நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப் படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை. பிரியமானவர் களே,* ***இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்,*** *இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும் போது அவர் இருக்கிறவண்ண மாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால்,* ***அவருக்கு ஒப்பாயிருப் போமென்று*** *அறிந்திருக்கிறோம். அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவரா யிருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான். 1 யோ. 3:1-3.*

யோவானுடைய இந்த அறிவிப்பை மனதில் கொண்டு பரிசுத்த வேதாகமத்தை ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை வாசிக்கத் தவறினால், தேவன் நமக்குச் சொல்ல விரும்பும் மையக் கருத்தை புரிந்துகொள்ள முடியாது. பரிசுத்த வேதாகமத்தில் யார் ஒருவரைப் பற்றிய பகுதியை நாம் வாசிக்கும் போதும், ஜீவாத்துமாக்களை தேவனுடைய பிள்ளைகளாக மாற்றுவதற்கு இவருடைய வாழ்க்கையில் தேவன் என்ன செய்கிறார்? என்று நமக்குள் கேட்டுக்கொள்ளவேண்டியது அவசியம். பரலோகத்திலுள்ள தேவனுடைய நித்திய ராஜ்யத்தில் தேவனுக்கென்று பிள்ளைகள் இருக்கவேண்டும் என்பதே அவருடைய சித்தமென்று சென்ற பாடத்தில் பார்த்தோம். “ஆதாமுக்குள்” வாழும் எல்லா மக்களைக் குறித்தும் தேவனுடைய திட்டம் இதுவே. தேவனுடைய ராஜ்யத்திலும், கிறிஸ்துவின் ராஜ்யத்திலும் மறுபடியும் பிறந்தவர்களாய் வாழ்கின்ற கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையில் இந்த சித்தம் இன்றும் நிறைவேறி வருகிறது. *யோவான் 1:12,13; 3:3-8; கொலோ. 1:12-14.* சிறு பிள்ளைகள்

தங்களுடைய மனதிலும், மனச்சாட்சியிலும் பெரியவர்களுக்குரிய பக்குவத்தை அடையும் வரையிலும் தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கிறார்கள். *லூக்கா 18:16; ரோமர் 2:14,15.*

**தேவன் நம்மை படைத்ததின் நோக்கத்தை நிறைவேற்றக்கூடிய வகையில் நம்மை அவர் எப்படி வடிவமைத்திருக்கிறார்** என்பதனை இப்பாடத்தில் தெரிந்துகொள்வோம். நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கவேண்டும் என்று அவர் நம்மை படைத்திருக்கிறார் என்பதை நம்பாதவர்கள் எவர்களோ, அவர்கள் வேதாகமத்தை உரிய விதத்தில் கற்றுக் கொள்ளவும் முடியாது, ஆவிக்குரிய தேவனுடைய ராஜ்யத்திற்கென்று தங்களுடைய விசுவாசக் கதவினை திறக்கவும் முடியாது, அவர்களுடைய "உள்ளான மனிதனில்" மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படவும் முடியாது. *2 கொரி. 3:18.* நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு வேதத்தைக் கற்றுக்கொள்வது முக்கியமானது. நாம் எதை கற்றுக்கொண்டு, எதன் மீது விசுவாசம் வைத்திருக்கிறோமோ, அதைப் பொறுத்து தான் விசுவாசத்தின் உறுதி அமையும்.

கிறிஸ்தவர்களுடைய விசுவாசத்தை கட்டி எழுப்பி அவர்களுடைய முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் இப்பாடங்களின் தலைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளன. மற்றவர்களை "சார்ந்து வாழும் பழக்கத்தை உடைய கிறிஸ்தவர்களை" அதிலிருந்து விடுவித்து, அவர்களாகவே வேதத்தைக் கற்றுக்கொள்ள ஊக்குவிப்பதே இப்பாடங்களின் நோக்கம். பல சந்தர்ப்பங்களில் செய்யப்படும் வழக்கமான பிரசங்கங்களினாலே, "கிறிஸ்தவர்கள்" என்று அழைத்துக்கொள்ளும் அநேகர், படைப்பின் நோக்கத்தைப் புரிந்துகொள்ளாமலே போய்விட்டார்கள்.

புதிய ஏற்பாட்டில் உள்ள நிருபங்களும், புத்தகங்களும் எழுதப்படும் முன்பு பிரசங்கியார் மூலமாகவும், போதகர் மூலமாகவும் கிறிஸ்தவர்கள் தேவனுடைய வார்த்தையை கேட்டு வந்தார்கள். *2 தீமோ. 2:2.* இந்த உலகத்தில் உள்ள மக்களும், கிறிஸ்துவுக்குள் "புதிதாகப் பிறந்த குழந்தைகளும்" கிறிஸ்தவ பிரசங்கியார்களும், போதகர்களும், தங்களுக்கு சொல்லும் தேவனுடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுப்பது





இன்றளவிலும் முக்கியமாய் இருக்கின்றது. *அப். 8:4; தீத்து 1:9; 2:3-5; 1 பேதுரு 2:2,3.* இயேசு கிறிஸ்துவால் பரிசுத்த ஆவியானவர் மூலமாக எழுதி கொடுக்கப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தைகள் நம்முடைய கைகளில் இருப்பதால், நாமே சொந்தமாக அவைகளைக் கற்றுக்கொண்டு விசுவாசத்தில் வளரமுடியும். *ரோமர் 10:17.* படிப்பறிவில்லாத கிறிஸ்தவர்கள் முயற்சி எடுத்து கல்வியறிவை வளர்த்துக்கொண்டு வாசிக்கக் கற்றுக்கொள்ள முடியும், அப்படி கற்றுக்கொள்ளும் காலம் வரும் வரையிலும் மற்றொருவரை தேவனுடைய வார்த்தையை வாசிக்கக் சொல்லி, அதை கேட்டு பயன் அடையலாம். படிப்பறிவில்லாததினாலேயே ஒருவர் அறிவில்லாதவர் என்று சொல்லிவிடமுடியாது. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களில் அநேகர் படிப்பறிவில்லாத அடிமைகளாய் இருந்திருக்கக் கூடும். "நான் வருமளவும் வாசிக்கிறதிலும் புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு" என்று *1 தீமோ. 4:13* இல் தீமோத்தேயுவிடம் பவுல் கூறினான்.

"பிதாவாகிய தேவனுக்குள்ளும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதுகிறதாவது" என்று பவுல் கூறினான். *1 தெசலோ. 1:1.* இங்கு குறிப்பிடப்படுபவர்கள் விசுவாசிகள் என்பதை கவனியுங்கள். "ஆகையால், நீங்கள் தேவ வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவவசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவ வசனந்தான், **விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது.**" *1 தெச. 2:13.*

கிறிஸ்தவர்களாக வாழ்கின்ற நமக்குள் தேவனுடைய வார்த்தை கிரியை செய்யாவிட்டால், நாமே சொந்தமாக முயற்சி செய்து தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொண்டு, நமது "விசுவாசத்தின் கதவினை" திறந்து கொள்ளவேண்டியது அவசியம். கிறிஸ்தவர்கள் மற்ற மனிதர்கள் சொல்வதை கவனிப்பதை குறைத்துக்கொண்டு, தாங்களே முயற்சி செய்து தேவனுடைய வார்த்தையை அதிகமாகக் கற்றுக்கொள்ள ஊக்குவிப்பதே

இப்பாடங்களின் நோக்கம். *எபிரெயர் 5:11-6:3.*

முதல் பாடத்தைப் போன்ற அமைப்பிலேயே இந்தப் பாடமும் எழுதப்பட்டுள்ளது. வசனங்களை அந்த சந்தர்ப்பப் பொருளின் அடிப்படையிலேயே பயன்படுத்தி இருக்கிறோம். இதை வாசிக்கின்ற யாவரும் தாங்கள் படைக்கப்பட்டிருக்கின்ற விதத்தைக் குறித்து இதில் என்னவெல்லாம் புரிந்துகொள்கிறார்களோ, அவற்றையெல்லாம் உண்மையாக நம்புகிறார்களா என்று தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்ளவேண்டும். நாம் நமது நம்பிக்கையை சத்தியத்தின் மீது மட்டுமே வைத்திருக்கிறோமா? நமது விசுவாசத்தின் கதவினை விரிவாகத் திறப்பதற்கு இதுதான் ஒரே வழி.

**பாடம்**

*தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான். ஆதி. 2:7.*

இந்த வாக்கியத்தின் அர்த்தத்தை எளிதாய் புரிந்துகொள்ள முடியும். மனிதனுக்கு தேவன் தந்த இரண்டு பகுதிகளை இது விவரிக்கின்றது. ஒரு தெய்வ வழிபாடு செய்கின்ற கிறிஸ்தவ மார்க்கத்தின் ஒரு முக்கியமான பகுதியாக இது இருக்கின்றது. இதன் மீதுள்ள நம்பிக்கையினாலே நம்முடைய விசுவாசம் கட்டி எழுப்பப்படுகிறது. ஆதாமுக்குள் உருவான மனுக்குலம் முழுவதுமே பூமியிலிருந்து எடுக்கப்பட்ட சரீரத்தோடு, தேவனுடைய ஆவி இணைந்ததின் விளைவாக உருவானது தான் என்று நாம் நம்பாவிட்டால், நமது வேதபாடத்தின் அடுத்த நிலைக்கு நாம் செல்ல முடியாது. மனிதருடைய சரீரங்கள் மண்ணாகி மீண்டும் பூமிக்குத் திரும்புகின்றன என்பதை நாத்திகர்கள் மறுக்க முடியாது. ஆத்திகர்கள் இதை ஏற்றுக்கொள்கிறார்கள். மனிதனுக்கு ஆவி என்ற ஒரு பகுதி இருப்பதையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆவியும் சரீரமும் ஆகிய இரண்டும் தாயின் கர்ப்பத்தில் ஒன்றாக சேரும் போது ஒரு ஜீவாத்துமா உருவாகின்றது. ஆவியோடு கூட ஆத்துமா என்ற ஒரு பகுதியும்





இணைந்திருக்கிறது. இது மனிதனுடைய மூன்றாவது பகுதி, இதை பவுல் *1 தெச. 5:23*-இல் விவரிக்கிறான்.

நமது ஆவி தேவனிடத்தில் இருந்து வந்தது, தேவனிடத்திற்கே போய் விடும். *பிரசங்கி 12:7; எபிரெயர் 12:9.* விசுவாசத்தினாலே நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அடையாளம் கண்டுகொண்ட பிற்பாடு, நம்முடைய ஆவி அவரிடத்திலிருந்து தான் வந்தது என்ற சத்தியத்தை அறிந்து விசுவாசிப்பது அவசியம். இந்த முக்கியமான விஷயங்களை விசுவாசிப்பதில் நாம் இடறலடையக்கூடாது. தேவன் தம்முடைய சாயலின்படி மனுஷனுடைய ஆவியை அவனுக்குள் உண்டாக்குகிறார். *சகரியா 12:1; யாக்கோபு 3:9.* தேவனை நம்முடைய பிதாவென்று விசுவாசிப்பதே நம்முடைய விசுவாசக் கதவினை திறப்பதற்கு எடுத்து வைக்கும் முதல் படியாகும். *மல்கியா 1:6.* தேவன் ஆவிகளின் பிதாவாயிருக்கிறார் *எபிரெயர் 12:9.* எல்லா மனிதருடைய ஆவிகளும் தேவன் தமது குமாரனைக் கொண்டு நியமித்துள்ள நியாயத்தீர்ப்பிலே வந்து நிற்க வேண்டும். *வெளி. 20:12-15.* நாத்திகர்களும் மற்றும் சில கிறிஸ்தவர்களும் மரித்த பிற்பாடு, தேவனுடன் நித்திய காலமாக வாழ்கின்ற வாழ்க்கையை இழந்து விடுவார்கள் என்பது வருத்தமான உண்மையாகும். *மத்தேயு 7:21; 10:28; மாற்கு 9:42-50.*

ஆதாம் தான் முதல் ஜீவாத்துமா "அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன்." *ரோமர் 5:14.* **முன்னடையாளம்** என்ற வார்த்தை மூல பாஷையாகிய கிரேக்க பாஷையில் **டுப்பாஸ் (Tupos)** எனப்படுகிறது. அச்சு, வார்ப்பு, தினுசு, உவமை என்றெல்லாம் இந்த வார்த்தைக்கு அர்த்தங்கள் உள்ளன. இயேசு கிறிஸ்துவே வரப்போகின்றவர்; அவர் ஆதாமைப் போன்ற சரீரத்தில் நசரேயனாகிய இயேசுவாக பூமிக்கு வந்தார். "மேலும், மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறது போல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுடைய சபைக்கு விளக்கினான். *1 கொரி. 15:49.* ஆதாமைப் பற்றிய இந்த வர்ணிப்பு மனித குலம் முழுவதிற்கும் பொருந்தக்கூடியது. நாம் எல்லாரும் அவனுடைய

சந்ததியாயிருக்கிறோம். *அப். 17:24-28.* தேவனுடன் செய்துகொண்ட உடன்படிக்கையில் உண்மையுள்ளவர்களாக இருக்கும் மக்களுடைய ஆவிகள், நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுடைய பிள்ளைகளாக **இயேசு கிறிஸ்துவை போல** ஆவிக்குரிய சரீரத்துடன் பரலோகத்தில் வாழும் உரிமையை பெற்றுக்கொள்ளும். *1 யோவான் 3:2.* ஒரு மனிதனுடைய ஆவி அவனுடைய / அவளுடைய சரீரத்தில் இருக்கும்போது அவனை / அவளை **ஜீவாத்துமா** என அழைக்கலாம். மரணத்திற்கு பிற்பாடு தேவன் கொடுக்கின்ற ஆவிக்குரிய சரீரம், நரகத்திற்குப் போகின்றவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. *2 கொரி. 5:1-5; யாக்கோபு 2:26.* மனித உடலில் இரண்டு பாகங்களைப் பற்றி இயேசுவும் மற்றும் சில பரிசுத்த மனுஷர்களும் பேசியிருக்கின்றார்கள்.

"என் சிநேகிதராகிய உங்களுக்கு நான் சொல்லுகிறேன்: **சரீரத்தைக்** கொலை செய்து, அதன் பின்பு அதிகமாக ஒன்றும் செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படாதிருங்கள். நீங்கள் இன்னாருக்குப் பயப்படவேண்டுமென்று உங்களுக்குக் காண்பிக்கிறேன்: கொலை செய்த பின்பு நரகத்திலே தள்ள வல்லமையுள்ளவருக்குப் பயப்படுங்கள்; ஆம், அவருக்கே பயப்படுங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசு சொன்னார். *லூக்கா 12:4,5.* இங்கே நரகத்திலே தள்ளப்படுகின்ற மனுஷனுடைய பகுதியே ஆவியும் ஆத்துமாவும் இணைந்த உள்ளான மனிதனாகும். *2 கொரி. 4:16-18.* இங்கே பவுல் உள்ளான மனிதனையும், புறம்பான மனிதனையும் தெளிவாக வேறுபடுத்திக் காட்டுகிறான்.

"நீங்கள் **உங்கள் அவயவங்களை** அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், **உங்களை** மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள்." *ரோமர் 6:13.* கிறிஸ்தவர்கள் தேவனுக்கு சேவை செய்து, தங்கள் சரீரங்களின் அவயவங்களை நீதியான செயல்களை செய்யக்கூடிய கருவிகளாக பயன்படுத்தவேண்டும்.





"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எனக்கு அறிவித்தபடி நான் என் கூடாரத்தை விட்டுப் போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து, **இந்தக் கூடாரத்தில்** நான் இருக்குமளவும் உங்களை நினைப்பூட்டி எழுப்பிவிடுவது நியாயமென்று எண்ணுகிறேன். மேலும், நான் சென்று போன பின்பு இவைகளை நீங்கள் எப்பொழுதும் நினைத்துக்கொள்ள ஏதுவுண்டாயிருக்கும்படி பிரயத்தனம்பண்ணுவேன்" என்று பேதுரு சொன்னான். *2 பேதுரு 1:13-15.* மனிதனுடைய மரணத்தைப் பற்றி பேதுரு இங்கு தெளிவாக விவரிக்கிறான். நாத்திகர்கள் கருதுவது போல, அது மனித வாழ்வில் ஒட்டு மொத்தமான முடிவல்ல. விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களுக்கு அது ஆதாமுக்குள்ளான சரீர வாழ்க்கையின் ஒரு முடிவாகவும், ஆவிக்குரிய வாழ்க்கையின் ஒரு ஆரம்பமாகவும் இருக்கின்றது. இப்படிப்பட்டதொரு வாழ்க்கையையே இயேசு கிறிஸ்து இப்பொழுது அனுபவித்து மகிழ்கிறார். இந்த வசனங்களின் மீது உறுதியான விசுவாசம் இல்லாத கிறிஸ்தவர்கள் மரண பயத்தினால் அவதிப்படக்கூடிய பிரச்சனை இருக்கின்றது. அவர்கள் தங்கள் சரீரங்களைக் கருவிகளாகப் பார்ப்பதில்லை. ஆகையால், அவர்கள் தங்கள் சரீரங்களைக் கொண்டே அடையாளப்படுத்திக்கொள்கிறார்கள். "அவள் அழகாக இருக்கின்றாள்", "அவன் உயரமாகவும், அழகாகவும் இருக்கின்றான்."

பின்வரும் வசனத்தை மேலே குறிப்பிட்ட வேதாகம சத்தியத்தோடு இணைத்துப் பார்க்கவேண்டும். தேவன் என்பதைக் குறிப்பிடும் கிரேக்க வார்த்தை **தியோ (Theo)** என்பதாகும். இதன் காரணமாக தேவனையும் அவருடைய சித்தத்தையும் பற்றி படிப்பதை இறையியல் (Theology) என்று குறிப்பிடுகிறோம்.

*தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித் தார், அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். ஆதி. 1:27.*

இந்த வசனம் எழுப்புகின்ற கேள்வி என்னவென்றால், ஒரு ஜீவாத்துமாவின் ஆண், பெண் பாகுபாட்டை நிர்ணயிப்பது எது? *ஆதி. 2:7* வசனத்தின் அடிப்படையில் பார்த்தால், இதற்கான பதில் எளிமையானது

தான். நாம் இப்போது வாழ்கின்ற இந்த சரீரத்தில் நுழையும் முன்பாக நமது ஆவி ஆண், பெண் பாகுபாடு அற்றதாக இருந்தது என்ற முடிவுக்கு வருகிறோம். உள்ளான மனிதன் என்று குறிப்பிடுகின்ற இந்த ஆவியானது இப்பொழுதும் ஆண், பெண் பாகுபாடு அற்றதாக இருக்கின்றது. மரணத்திற்குப் பிற்பாடும் அது இதே நிலைமையிலேயே இருக்கும். தேவன் கொடுக்க இருக்கும் புதிய சரீரங்களுக்குத் திருமணம் என்ற அவசியமே இருக்காது என்று இயேசு சதுசேயரிடம் சொன்னார். *லூக்கா 20:34-36.* “நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே” என்று பவுல் கூறினான். *கலா. 3:26.* “மறுபடியும் பிறந்த” ஒவ்வொரு மனிதனுடைய உள்ளான மனிதனின் அடையாளத்தையும், மதிப்பையும் பற்றி இங்கு அவன் பேசுகிறான்.

இதன் காரணமாக “யூதனென்றும், கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, **ஆணென்றும், பெண்ணென்றுமில்லை ;** நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்” என்றும் அவன் குறிப்பிட்டான். *கலா. 3:28.* “சூரியனுக்குக் கீழே வாழும்” வாழ்க்கையைப் பற்றி குறிப்பிடும் நோக்கத்திலேயே ஏசாயாவும், பவுலும் தேவனுடைய பிள்ளைகளை ஆண், பெண் என்ற பாகுபாட்டுக்கு உட்படுத்தி பேசியிருக்கிறார்கள். பார்க்கவும். *ஏசாயா 43:5-7; 2 கொரி. 6:18.* இந்தப் பூமியில் வாழும் போது ஆண், பெண் என்ற வித்தியாசமான சரீரங்களில் வாழ்ந்தாலும், அவர்களை தேவனுடைய பிள்ளைகளென்றே வேதம் குறிப்பிடுகின்றது; இருப்பினும், விசுவாசமுள்ள தேவனுடைய மக்கள் ஒவ்வொருவரும் மரித்து உயிர்த்தெழுந்த பிற்பாடு, இயேசு கிறிஸ்து இப்பொழுது பெற்றிருக்கிறது போன்ற விசேஷித்த சரீரம் அவர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும். “ஆகிலும், மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்களென்று ஒருவன் சொல்வானாகில்” *1 கொரி. 15:35.* இந்தக் கேள்விகளுக்கான பதில்களை பிற்பாடு நாம் படிப்போம். ஆயினும், இங்கு கேள்விகளுக்கு பவுலின் பதில் என்னவென்று தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், 15–ஆம் அதிகாரத்தின் மீதமுள்ள வசனங்களைத்





தொடர்ந்து வாசியுங்கள்.

ஆண்களின் சரீரங்களும் பெண்களின் சரீரங்களும் வித்தியாசமானவை. அவற்றில் சில வெளிப்படையாக தெரியக்கூடியவை; அப்படியிருந்தாலும், மூளை என்ற பகுதி வெளிப்படையாகத் தெரிவதில்லை. நமது “உள்ளான மனிதன்” வாழக்கூடிய இடமே இந்த மூளை தான். “தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்.” *1 கொரி. 12:18.* நம்முடைய ஆவி நம்மை விட்டுப் பிரிந்த பிற்பாடு, இந்த மூளை பூமிக்குத் திரும்பி மண்ணோடு மண்ணாகும். *யாக்கோபு 2:26.* நம்முடைய மனதுக்கும் இருதயத்துக்கும் மனச்சாட்சிக்கும் இருக்கிற சக்திகளெல்லாம் நமது “உள்ளான மனிதனுக்கு” உரியவை; நம்முடைய மனதில் இருப்பவைகளை அறிந்துகொள்ளக்கூடிய சக்தி நமது ஆவிக்கு இருக்கிறது. மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? *1 கொரி. 2:11.* நம்முடைய மனம் மனச்சாட்சியோடு இணைந்து, நமது உள்ளான மனிதனின் நிலைமையையும், நோக்கங்களையும் சோதித்துப் பார்க்கக் கூடியது. *2 கொரி. 13:5.* இந்தப் பூமியில் வாழும் மனிதர்கள் விசேஷித்த பல வித்தியாசமான காரியங்களை நிறைவேற்ற வேண்டி இருப்பதால் ஆண், பெண் என்ற சரீர வேறுபாடுகளை தேவன் அமைத்திருக்கின்றார். பின்வரும் வசனத்தில் ஒரு ஜீவாத்துமாவை பெண் உடலில் அமைத்திருப்பதின் நோக்கம் தெளிவாகச் சொல்லப்படுகின்றது. ஆதாமும், ஏவாளும் திருமணம் செய்துகொண்டவர்களாக இருந்தார்கள் என்ற சந்தர்ப்பப் பொருளிலேயே பின்வரும் வசன பகுதியை புரிந்துகொள்ள வேண்டும். *மத்தேயு 19:3-6.*

*ஆதியாகமம் 2:20-25.* தேவன் உயிரினங்களை எப்படி படைத்தார் என்பதை வேதத்தை வாசித்து தெரிந்துகொள்ளச் செய்வதே இப்பாடத்தின் நோக்கம். ஆண் பெண்ணுடைய வித்தியாசமான வேலைகளில் அவரவருடைய பங்கு என்ன என்பதை விவரமாகப் படிப்போம். இதைப் பற்றி இன்னும் சில காரியங்களைப் பற்றியும் மற்ற பாடங்களில் ஆராய்ச்சி செய்வோம். ஆயினும், தேவன் எல்லா

உயிரினங்களிலும் வைத்திருக்கின்ற ஒரு காரியத்தைக் குறித்து நாம் முழுமையாக ஆராய்ந்து புரிந்துகொள்ளவேண்டும். இயேசு தமது மலை பிரசங்கத்தில் தேவன் படைத்த எல்லா உயிரினங்களிலும் இயற்கையாய் அமைந்துள்ள தேவைகளைப் பற்றி பேசினார்.

*ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்;* **ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும்,** *உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?* என்று இயேசு கூறினார். *மத். 6:25-27.*

இயேசுவானவர் தமது சிறந்த பேச்சுத் திறமையால் யூதர்களுக்கு முன் வைத்த நான்கு கேள்விகளை கவனியுங்கள். கேள்விகளுக்கான விடைகளை அவர்கள் அறிந்திருந்தார்கள். ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், ஆடைகளைக் காட்டிலும் சரீரமும், விசேஷித்தவைகள் என்றும், பறவைகளை விட அவர்கள் தேவனுக்கு விசேஷித்தவர்கள் என்றும் அவர்கள் நம்பினார்கள். சூரியனுக்குக் கீழே உள்ள வாழ்க்கையில் கவலைப்படுவதினால் எந்த மாற்றமும் நிகழப்போவதில்லை என்று அநேகருக்குத் தெரிந்திருப்பது போல அவர்களுக்கும் தெரிந்திருந்தது. அவர்கள் ஏற்கனவே தெரிந்து வைத்திருந்த காரியத்தின் மீது அவர்கள் விசுவாசம் வைக்க வேண்டுமென்று இயேசு விரும்பினார்.

உயிரினங்களின் சரீரங்களில் ஆரோக்கியத்தை நிலை நிறுத்தும்படியாக இயற்கை நியதிகளை தேவன் ஏற்படுத்தியிருக்கிறார். ஏறக்குறைய தினந்தோறும் அறிவியல் ஆய்வகங்களில் இந்த





நியதிகளுக்கேற்ற காரியங்களை தொழில் நுட்பத்தின் உதவியோடு கண்டு பிடித்து வருகிறார்கள். விஞ்ஞானிகள் புதிதாக எந்த நியதியையும் உருவாக்குவதில்லை. தேவன் இந்த அண்ட சராசரங்களையும் படைக்கும் போது என்னென்ன நியதிகள் அவைகளில் இருக்க வேண்டும் என்று தம் மனதில் இருந்து சொன்னாரோ, அந்த நியதிகளையே இவர்கள் கண்டுபிடித்து வருகிறார்கள். ஆதாமுடைய சரீரத்தில் தம்முடைய சுவாசத்தை ஊதுவதற்கு முன்னதாகவே இந்த ஏற்பாட்டை செய்து முடித்து விட்டார். ஆதாமுடைய சரீரத்தின் தேவைகளை தேவன் அறிந்திருந்தார். தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து மனுக்குலத்தைப் பற்றியும், இயற்கையைப் பற்றியும் தெரிந்துவைத்திருந்தார். அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய சகலமும் *கொலோ. 1:16.* "மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்கவேண்டியதாயிருக்கவில்லை." *யோவான் 2:25*

"அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால்", ஜீவப்பிரமாணங்களைக் குறித்து இயேசுகிறிஸ்து போதித்தவைகளை கேட்டவர்கள் திகைப்படைந்தார்கள். *மத்தேயு 7:28.*

ஆதாமுடைய சரீரத்தை ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் வைத்துக்கொள்ள உணவு, தண்ணீர் போன்ற இன்றியமையாதவைகள் தேவைப்பட்டன. ஆதாம், ஜீவாத்துமா ஆவதற்கு முன்பாகவே அவனுடைய தேவைகளை சந்திப்பதற்கு வேண்டிய இவற்றை எல்லாம் தேவன் தோட்டத்திலே வைத்து இருந்தார். ஆதாமுடைய சரீர நலத்தைக் காக்கும்படியாக அவன் தண்ணீரையும், உணவையும் தேடி அலையும்படியான நிர்ப்பந்தத்தைக் கூட தேவன் ஏற்படுத்தவில்லை. நாம் உணவு உண்பதற்கும், தண்ணீர் குடிப்பதற்கும் நம்மை தூண்டக் கூடிய உணர்வுகளோடே படைக்கப்பட்டிருக்கிறோம். ஆதாமுடைய சரீரத்தைப் போலவே நமது சரீரமும் படைக்கப்பட்டிருப்பதால், இந்த உணர்வுகள் நமக்குள்ளும் இருக்கின்றன. பிறக்கின்ற எல்லா குழந்தைகளுக்கும் பசி

உணர்வு உண்டாகின்றது. இது இயற்கையாய் அமையப்பெற்ற தேவை என்று அழைக்கப்படுகிறது. இது போன்று, இயற்கையாய் அமையப்பெற்ற தேவைகளை திருப்திசெய்துகொள்ள நமக்கு மற்றொருவர் கற்றுக்கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இயல்பாகவே நாம் சுவாசிக்கின்றோம். நமது வயிறு, இருதயம், நுரையீரல்கள் மற்றும் சில பாகங்கள் நாம் உறங்கும் போதும் கூட வேலை செய்கின்றன. நம்முடைய தற்காலிக கூடாரமாகிய இந்த சரீரத்தைக் கவனித்துக் கொள்வதற்கு அவசியமான எல்லா உணர்வுகளையும் தேவன் நமக்குள் வைத்திருக்கின்றார். *2 கொரி. 5:1.*

இந்த பூமியில் ஆதாமைப் போல அநேக மனிதர்கள் உருவாவதற்கு ஏற்ப சந்ததியைப் பெருக்கும் சக்தியை தேவன் ஆதாமுக்குக் கொடுத்திருந்தார்; ஆயினும், ஆதாமுக்கு ஏற்ற துணை அவசியமாயிருந்தது. ஏவாளுக்கும் அவளைத் தொடர்ந்து வரும் பெண்களுக்கும் இருக்கும் வேலைகளில் இது முக்கியமான ஒன்று. “பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.” *ஆதியாகமம் 1:28.*

சந்ததியை பெருக்கும் விஷயத்தில் மக்கள் நன்றாகவே செயல்படுகிறார்கள்; ஏறக்குறைய 720 கோடி மக்கள் பூமியின் மீது வாழ்கிறார்கள். “இருவர் ஒன்று சேரும் “இந்த காரியத்திலும் மனிதர்கள் தங்களுடைய முடிவின்படி நடந்துகொள்வதற்கு தேவன் வாய்ப்பளிக்க வில்லை. எல்லா ஆரோக்கியமான ஆண்கள் மற்றும் பெண்களுக்குள்ளும் தங்கள் எதிர்பாலினத்தவரோடு உடல் உறவு கொள்ளும்படியான தேவை உண்டாகின்றது. உடல் உறவு தேவையை நாம் நிறைவு செய்து கொள்வதற்கு ஏற்ப நம்மைத் தூண்டக்கூடிய உணர்வுகளை தேவன் நமக்குள் படைத்திருக்கின்றார். *1 கொரி. 7:8,9.* உடல் உறவு தேவையை நிறைவுசெய்யும்படி தேவன் முன்பே தீர்மானித்து, திருமணத்தை நியமித்திருக்கிறார் என்பதை கிறிஸ்தவர்கள் புரிந்து கொள்வதால், அவர்களுக்குள்ளும் திருமணம் செய்துகொள்ளும்படியான தூண்டுதல் உண்டாகிறது. திருமணத்தின் மூலம் நம்முடைய பாதுகாப்புக்கும்,





கனத்துக்கும், மகிமைக்கும் எந்த இடையூறும் இல்லாமல், எதிர்பாலினத் தவருடன் உடல் உறவு கொள்ள முடியும். இந்த தேவையை நிறைவு செய்துகொள்வதற்கு, தேவனுடைய சத்தியத்தின்படியான சரியான வழிமுறையை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுஷர்கள், தங்கள் உடலுறவு தேவையை நிறைவு செய்து கொள்ள சுய பாலினத்தவர் மீது ஆசை கொள்வது போன்ற தவறான வழிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். *ரோமர் 1:26-27.* ஓரினச் சேர்க்கையாளர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. *1 கொரி. 6:9,10.* கிறிஸ்தவர்கள் தங்கள் துர்இச்சைகளை **மேற்கொண்டு** கிறிஸ்துவைப் போலவே மாறவேண்டும். *ரோமர் 13:14.*

சாத்தான் இன்றைக்கு அநேக போதகர்களை தன் வசப்படுத்தி, தவறான செயல்களுக்குச் சாதகமாகப் போதிக்கச் செய்கிறான். பரிசுத்த ஆவியானவர் பவுலுக்கு இந்தச் செய்தியை தெரியப்படுத்தினார்: *மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை; தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார். 1 கொரி. 10:13.*

நாம் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டிருந்தாலும், தேவனுடைய வார்த்தையிலிருக்கும் வல்லமை நமக்கு மிகவும் அவசியமாய் இருக்கின்றது. *சங்கீதம் 139:14.* தேவனுடைய சாயலின்படி படைக்கப்பட்ட நமக்குள் தேவனால் கொடுக்கப்பட்டிருக்கின்ற ஆவி தான் அற்புதமான பகுதியாகும். *யாக். 3:9.* தேவனுடைய படைப்பில் விசேஷமாக உள்ள மனுக்குலத்தைப் பற்றி கற்றுக்கொண்டாலே, நம்மை படைத்தவருடைய குணங்களையும் தன்மைகளையும் பற்றி நாம் நிறைய கற்றுக்கொள்ள முடியும். இயேசுவைப் போல தேவனுக்குப் பிரியமான பிள்ளைகளாக மனிதர்கள் உருவாவதற்கு வேண்டிய ஆவிக்குரிய சட்டதிட்டங்களை அவர்

ஏற்படுத்தியிருக்கின்றார். இவைகளே புதிய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஜீவப் பிரமாணங்களாகும். *எபி. 8:10.* மற்றொரு பாடத்தில் இதைக் குறித்து பார்ப்போம். "ஆகாரத்தை விடவும், உடையை விடவும் விசேஷித்ததாய் இருக்கின்ற வாழ்க்கையில்" தேவன் நமக்கு நியமித்திருக்கின்ற தேவைகளைப் பற்றி கற்றுக்கொள்ளவே இந்தப் பாடத்தில் அதிகக் கவனம் செலுத்துகின்றோம். *மத்தேயு 6:25.*

நமது வாழ்வுக்கான ஜீவப் பிரமாணத்துக்கேற்றபடி இயேசு வாழ்ந்து காட்டி, அவருடைய மலைப் பிரசங்கத்திலே அவைகளை போதித்தார். இயற்கையாய் அமையப் பெற்ற நமது சரீரத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளவும், கனத்தையும், மகிமையையும் பெற்றுக்கொள்ளவும் உதவக்கூடிய காரியங்களை அவர் போதித்தார். சிறு பிள்ளைகளும் கூட சாதிக்கவும், கற்றுக் கொள்ளவும் விரும்புகின்றார்கள். அவர்களுடைய சாதனைகளை மற்றவர்கள் கைதட்டி பாராட்ட வேண்டும் என்று விரும்புகிறார்கள். நாம் யாவருக்குள்ளும் மகிமையை தேடும் உணர்வு இருந்துகொண்டே இருக்கிறது. நமது மகிமையின் தேவையை நிறைவு செய்யும் அளவுக்கு உலகம் போதுமானதாக இல்லாததால், இந்தத் தேவையை தேவன் நமது "மறுமையின் வாழ்க்கையில்" நிறைவு செய்து விடுவார். *மத்தேயு 19:29.*

நமது மாம்சத் தேவைகள் சரீரத்தோடு தொடர்புடையவை, நமது சமூகத்தேவைகள் "உள்ளான மனிதனோடு" தொடர்புடையவை. நாம் மரித்துவிட்ட பிற்பாடும் மகிமையைத் தேடுகின்ற உணர்வு நமக்கு இருந்து கொண்டே இருக்கும். ஆகையினால் பரலோகத்திலும் நமக்கு இந்த விருப்பம் உண்டாகும். இப்பேர்ப்பட்ட நமது தேவைகளை இயேசு மறுபடியும் வரும்போது நிறைவு செய்வார் என்று பேதுரு சொல்கிறான்.

*இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்.*





*அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப்* **புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக்** *காணப்படும். 1 பேதுரு 1:6,7.*

நமது உள்ளான மனிதனில் பாதுகாப்பைத் தேடும் உணர்வையும், சமூக அங்கீகாரத்தைத் தேடும் உணர்வையும், எதிர்பாலினத்தவரோடு உடலுறவு கொள்வதற்கேற்ற உணர்வையும் தேவன் எப்படிப் படைத்திருக்கிறார் என்று பார்த்தோம்.

*தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து,* **மகிமையையும், கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு** *நித்தியஜீவனை அளிப்பார். ரோமர் 2:6,7*

மகிமையைத் தேடும்படி தேவனால் படைக்கப்பட்ட உள்ளுணர்வு நமக்குள் இருக்கின்றதா? ஆம் என்பதே மேற்கண்ட கேள்விக்கான பதில். இது சம்பந்தமான நமது தேவைகளை நிறைவுசெய்யும்படி தேவன் என்னென்ன செய்திருக்கிறார் என்பதை வேதபாடத்தில் நாம் கற்றுக்கொள்ளமுடியும். தேவன் நமக்குள் மகிமையைத் தேடும் உள்ளுணர்வை படைத்திருக்கின்றார். விசேஷமாகக் குழந்தைகளையும், வாலிபர்களையும் கவனிக்கும்பொழுது, இதை புரிந்துகொள்ளமுடியும். உலகம் முழுவதிலும் உள்ள மக்கள், அதாவது, தொட்டில் தொடங்கி, வாலிப வயதைக் கடந்து, வயதான பிறகும் கூட எதையாவது சாதிக்க வேண்டும் என்ற விருப்பம் மக்களுக்கு தொடர்ந்து நீடிக்கிறது. சாதிக்கும்படி அநேக புதிய விஷயங்களை கற்றுக்கொள்ள இந்த உள்ளுணர்வே நம்மை ஊக்குவிக்கின்றது. நாம் கற்றுக்கொண்டவைகளை செயல்படுத்த விரும்புகின்றோம். இந்த விருப்பமே மக்களுக்கு மதிப்பை ஏற்படுத்துகிறது. **டைம் (Time)** என்னும் கிரேக்க வார்த்தையின் பொருள் மதிப்பு என்பதாகும். புதிய ஏற்பாட்டில் இது **கனம்** என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**டாக்ஸா (Doxa)** என்ற கிரேக்க வார்த்தையிலிருந்தே மகிமை என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சமுதாயத்தில் பிறரது மதிப்புக்குரியவராகவும் புகழ்ச்சிக்குரியவராகவும் இருப்பதினாலே மகிமை உண்டாகிறது. இந்த இரண்டு விஷயங்களைப் பற்றி இயேசு என்ன சொல்லியிருக்கிறார் என்பதை *லூக்கா 14:7-14*-இல் பார்க்கலாம். சாதனைக்கும், மரியாதைக்கும் உரிய வாய்ப்புகள் அநேகருடைய வாழ்க்கையில் குறைவாகவே இருக்கின்றன. தேவனுடைய பிள்ளைகள் என்ற அடையாளத்தைப் பெற்றிருந்தும், விசுவாசத்தில் ஊன்றக் கட்டப்படாத பெலவீனமான கிறிஸ்தவர்கள் இந்த இரண்டு தேவைகளையும் முழுமையாக நிறைவுசெய்துகொள்ளவே முடியாது. இதற்கான சாத்தியக் கூற்றினை அவர்கள் ஒவ்வொருவருடைய "உள்ளான மனிதனும்" இழந்துவிடுகின்றான். தேவன் மனிதர்களுக்குள் வைத்திருக்கின்ற தேவைகளின் நிமித்தம் கேட்பதையும், தேடுவதையும், தட்டுவதையும் விட்டுவிடுபவர்கள் பரிதாபத்துக்கு உரியவர்கள். *மத்.7:7-8.*

தேவனுடைய ராஜ்யத்தில் அநேகம் பிள்ளைகள் இருக்கவேண்டும் என்ற தேவனுடைய விருப்பத்தை சாத்தான் தகர்க்கக் கூடும் என்பதை தேவன் ஏற்கனவே அறிந்திருந்ததால், மனிதனை இரண்டு பகுதிகளாகப் படைத்திருக்கிறார். இதைக் குறித்து நாம் மூன்றாம் பாடத்தில் படிப்போம். தேவனுடைய ராஜ்யத்தில் மகிமையுள்ள பிள்ளைகளாக இருக்கும்படி நம்மை ஊக்குவிக்கக்கூடிய உள்ளுணர்வை அவர் நமக்குள் வைத்திருக்கின்றார். ஆகையால், நமது "உள்ளான மனிதனுக்குரிய" சகல தேவைகளையும் தேவனுடைய ராஜ்யத்தில் நமக்குக் கொடுக்கப்படும் சுதந்தரமும், நித்திய ஜீவனும் நிறைவு செய்துவிடும். நமது சரீர மரணத்தின் போது, சரீரத்தை விட்டு பிரிந்து போகும் நம்முடைய மற்றொரு பகுதிதான் "உள்ளான மனிதன்". "சூரியனுக்குக் கீழே" உள்ள வாழ்க்கையின் சரீரத் தேவைகளை நிறைவுசெய்துகொள்வது மட்டுமல்லாமல், இன்னும் சில முக்கியமான தேவைகளும் இருக்கின்றன. *பிரசங்கி 1:14.* " முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் எவன் நன்மை செய்கிறானோ அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானமும் உண்டாகும்" என்று அப்போஸ்தலனாகிய





பவுல் தெரிவிக்கிறான். *ரோமர் 2:10.* "மகிமையும், கனமும், சமாதானமும்" ஆகிய இந்த மூன்றும் நமது நித்தியத்துக்குரிய தேவைகளாகும். *வெளி. 21:7.* "மகிமையையும், கனத்தையும், அழியாமையையும்", தேடுவதில் சோர்வடையாத தேவனுடைய பிள்ளைகளுக்கு மட்டுமே இந்த சுதந்தரம் கிடைக்கும். தேவனுடைய ராஜ்யத்துக்குப் புறம்பே வாழ்கின்ற மரணத்துக்கு ஏதுவான மனிதன் எவனும் தனது ஆவிக்குரிய தேவைகளை நிறைவுசெய்து கொள்ளவே முடியாது. *மத்தேயு 6:33.*

*ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷ னானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது. 2 கொரி. 4:16.*

உலகத் தோற்றத்திற்கு முன்பே கிறிஸ்தவனுடைய மகிமையின் தேவையை நிறைவு செய்யும் எண்ணம் தேவனுக்கு இருந்தது என்பதை நம்ப முடியாத கிறிஸ்தவனுடைய "விசுவாசத்தின் கதவு" தேவ இரகசியமான ஞானத்தை ஏற்றுக்கொள்ளாதபடிக்கு மூடப்பட்டிருக்கிறது. *1 கொரி. 2:7.* இருப்பினும், அவர்களது மகிமையின் தேவை, நிறைவை தேடிக் கொண்டேயிருக்கும். இந்த நிறைவை பெற்றுக்கொள்ள அநேகர் மனித ஞானத்தால் திட்டமிடப்பட்ட காரியங்கள் மீது தங்கள் விசுவாசத்தை வைத்துவிடுகின்றனர். சிலர், தங்களுக்கு மகிமையின் தேவை இருப்பதை யே மறுக்கின்றனர். மற்றவர்கள் இந்தத் தேவையை நிறைவு செய்யும் தேவனுடைய திட்டத்தை நிராகரிக்கின்றனர். "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்." *2 கொரி. 4:4.* நித்திய மகிமை என்றால் என்ன என்பதை தேவன் இயேசு கிறிஸ்து மூலமாகத் தெரியப்படுத்துகின்றார். *யோவான் 1:4,5; கொலோ. 1:25-28.*